உ

சிவமயம்.

# பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம்.

இஃது,
திருவெண்காடு
ஆறுமுகசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு,

சென்னை கூளை,
பரப்பிரம முத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

௧௮௮௬ ௵.

உ

சிவமயம்

# பஞ்சீகரணம்

## வேதாந்த சித்தாந்தம்.

குருவணக்கம்

ஸ்ரீசற்குருவே நம:

சுலோகம்.

பரமானந்தம் பரமசுகதம்
கேவலம் ஞான மூர்த்திம்
நிஸ்வாதீதம் ககன சதுர்சியம்
தத்வமசியாதி லட்சியம். ௧

ஏகம் நித்தியம் விமலம் மசலம்
சர்வதா சாட்சி பூதம்
பாவாதீதம் திரிகுண ரகிதம்
ஸ்ரீசற் குருந்தம் நமாமி. ௨

தியானமூலம் குரோர் மூர்த்தயம்
பூசாமூலம் குரோர்பதம்
மந்திரமூலம் மாரோர்வாக்கியம்
முத்திமூலம் குரோர்கிர்ப ௩

# பருபகரணை

குருப்ரம்மம் குரோர் விஷ்ணு
குருதேவதா மஹேஸ்வர
குருசாட்சாத் பரப்பிரமம்
தஸ்மைஸ்ரீ குருவே நம
மன்னாதா ஸ்ரீ ஜகன்னாதா ஞா
மகத்குரு ஸ்ரீ தத்குரும
மமாத்மா சர்வ ..
தஸ்மைஸ்ரீ குருவேநம
சைதன்யம் ... சாந்தம் ரு
வியோமா ... நிரஞ்சனம்
நாதபிந்து கலா ...
தஸ்மைஸ்ரீ குருவேநம
பிரம்ம விஷ்ணுஸ்ய ருத்ரஸ்ய ஸ்ரீ
ஈஸ்வரஸ்ய சதாசிவ
ஏகேகாப்பக தக்கேய
தஸ்மைஸ்ரீ குருவேநம
சர்வாதமகம் சாவவசயம் னி
சச்சிதானந்த விக்ரகம்
சர்வாதாரம் சர்வபூரணம்
சதாநாரா யணம்பரே. அ

குருவேநம.

ராகத்வேஷப் பிரகாணம்.

எந்தராகத்வேஷங்களினாலே சாமானபேரும் ஜன னமரணதுக்கப் பரம்பரையுடையவர்களாகியிருக்கிறார்

களோ அந்த ராகத்வேஷங்களினுடைய ஸ்வரூபங்களை விசாரிப்போமாக

ராகமென்றும்—த்வேஷமென்றும்—காமமென்றும்—குரோதமென்றும்—உலோபமென்றும்—மோகமென்றும்—மதமென்றும்—மாற்சரியமென்றும்—இட்சியமென்றும்—அசூயையென்றும்—டம்பமென்றும்—தர்ப்பமென்றும்—அங்காரமென்றும் ஆக-௰௩

இந்தப்பதின்மூன்றுக்கும்—விவரம்

ராகமாவது

பரஸ்திரீ கமனம் பண்ணவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு ராகமென்றுபெயர். இதற்குச்சாட்சி இராவணன்.

த்வேஷமாவது.

தனக்காகாதவர்கள் அடக்காமபண்ணினால் அவர்கள் மேல விரோதத்தைவைத்து அதற்குப்பிரதிஉபகாரம் பண்ணவேணுமென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு த்வேஷமென்று பெயர். இதற்குச்சாட்சி இரணியன்.

காமமாவது

கிரகம்—கிராமம்—க்ஷேத்திரம்—தனம்—தானியங்களை மேன்மேலும் சம்பாதிக்கவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்குக் காமமென்றுபெயர். இதற்குச்சாட்சி நரகாசுரன்

குரோதமாவது.

தன்பொருளையாராகிலும் அழித்தால அவர்கள் பேரில் கோபித்து விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு குரோதமென்றுபெயர். இதற்குசாட்சி பகாசுரன்.

உலோபமாவது.

தன்பொருளில் யாராகிலும் ஒருகாசுகேட்டால் அரைக்காசு மிலலையென்று விகற்பித்து வருகிற சித்த விர்த்திக்கு உலோபமென்றுபெயர். இதற்கு சாட்சி துரியோதனன்.

மோகமாவது.

தான் சம்பாதித்த பதார்த்தத்தின்மேல் பிரியமாகிய ஆசாபாசங்களைக்கொண்டு விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு மோகமென்றுபெயர் -இதற்கு சாட்சி தசரதமகாராஜன்

மதமாவது.

ஐசுவரிய கர்வத்தினாலே கிர்த்தியா கிர்த்தியந்தெரியாமல் யாரையும் அலட்சியமாக இகழ்வுசெய்து விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு மதமென்றுபெயர் இதற்குசாட்சி கார்த்தவீரியார்ச்சுனன்

மாச்சரியமாது.

யாராகிலும் தன்னிலும் அதிகமாக மேன்மைபெற்றிருந்தால் அதுபொறாமல் விகற்பித்து வருகிறசித்தவிர்த்திக்கு மாச்சரியமென்றபெயர் இதற்குச்சாட்சி சுயோதநன் சக்கிரன்

இரட்சியமாவது.

தனக்குவந்த துக்கம் அன்னியருக்கும் வரலாகா தோ என்று விகற்பித்து வருகிறசித்தவிர்த்திக்கு இரட்சியமென்றுபெயர் இதற்குசாட்சி அருணைட்சன்.

அருளையாவது.

தனக்குவந்தசுகம அன்னியருக்கும் வரலாகுமோ வென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு அருளை யென்றுபெயர் இதற்குச்சாட்சி பவுண்டரகவாசு தேவன்.

டம்பமாவது.

தான்செய்கின்ற புண்ணியகருமங்களைப் பலரும் பார்த்து பளாயென்று மெச்சிக்கொள்ளவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்குடம்புமென்று பெயர் இதற்குசாட்சி அம்பரீஷன்.

தர்ப்பமாவது.

தானே சுத்தவீரன் தனக்கு யாவரும் நிகரில்லை யயன்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு தர்ப்ப மென்றுபெயர் இதற்குச்சாட்சி சதகண்டராவணன்.

அங்காரமாவது.

எண்டா என்னைஅறியாயோ நீதானோ என்னைச் சிருட்டிக்கிறவன் நான்பிடித்தபிடி விடுகிறதில்லையென்று

ஸ்கூலி ஏவருகின்ற சரீரத்திற்கு ஆங்காரமென்று
பெயர் கொடுத்தார்கள் ஞானசைடவன்

ஆக இந்தப்படிமூன்று காரியமாகிய விகற்பசத்தி
களாலே இந்தப்படிமூவரும் மகாபராக்கிரமசாலிக
ளாகியும் வரபராதிகளாகியுமிருந்தும் ஒவ்வொருசாரி
யத்திலே ஒவ்வொருவன் புரமிதாசளத்திராதிசு
மோகிதராய் சமுசயங்களையுமிருந்தபே ணதினுலும
இந்தப்படிமூன்றும் விசாரங்களாய விசுறபிரதுவரு
கிற சித்தவிசார ஞானங்களையும் சருவமும் பெறறவாிடத்
தில் உபதேசம் பெற்று நடப்பார்கள் இதுகள் விபரீத
த்திற்கு யுக்தியான சகாயக சுவரூபமென்றறிந்து
சறசுவாசத்திலே ஞானகுருவால கிருபைசெய்யப்ப
ட்ட ஞானோபாயவிவேகபிரமாணமவாினாலே இவை
களைச் சின்னம்பின்னப்படுத்தி அழித்து நிவாத்திசககக
டவதாா

இசையென்றும் பசுதியென்றும் சிரத்தையெ
ன்றும் மூன்றுவிதமாகும

இம்மூன்றுக்கும விவரம்

இசையாவது.

பசி—தாகம்—நிமித்தியம - அன்னபானாதிகள் கொ
ள்ளவேண்டுமென்றும மலவிசாச்சனை ஜலவிசர்ச்சனை ப
ண்ணவேண்டுமென்றும வருகிற சித்தவிர்த்திக்கு இ
சையென்றுபெயர்—இதுகளவந்தபோது சற்காலத்தி
லசெய்தால் சாந்தமாயிருக்கும அன்றி பாதையாயி

ருக்கும் இதனாலே புண்ணியம-பாவம்-சுவர்க்கம்- நரகம-பந்தம- மோட்சங்களில்லையென்று அறியவேண்டியது.

## பகுதியாவது.

வேதாந்த சாஸ்திர சர்வாந்திரியாமியாகிய குருவினிடத்திலே வருகிற பிரதி விசுவாசத்திற்கு பகுதியென்றுபெயர் அதிசவிசுவாசத்திற்கு சிரத்தையென்றுபெயர முமூட்சகாள் அவசியம பத்திசிரத்தைபண்ணவேண்டும ஏன்பண்ணவேண்டுமென்றால பூர்வத்தில் கட்டுவாங்கமகாராசன் இந்தபத்திசிரத்தையினாலே இரண்டு நாழிகையிலே மோட்சத்தையடைந்தாரென்று சாஸ்திரஞ்சொல்லுகிறபடி அவசியம சிரத்தாபத்திகொள்ளவேணடும இந்தமூன்றும மோட்சத்துக்கேதுகளாயிருக்கின்றன.

## சாதனசதுஷ்டையசம்பத்தி.

எந்தச்சாதன சதுஷ்டையசம்பத்தினாலேமுமூட்சாளானபேர்கள் மோட்சத்தைஅடைவார்களோ அந்தச்சாதனசதுஷ்டைய சமபத்தியை விசாரிப்போமா சாதனசதுஷ்டைய சம்பத்தியாவது நித்தியாநித்தியவஸ்துவிவேகமென்றும் இகவைராக்கியபலபோகவிரா

கமென்றும் சமாதி சட்கசம்பத்தியென்றும் முமுட்சத்வமென்றும நான்காம் இவைநான்கிற்கும் விவரம.

நித்தியாநித்தியவஸ்துவிவேகமாவது.

பிரமமேநித்தியம் சமஸ்தநாமரூபமாய்த் தோற்றுகிறதேகேந்திரிய பிரபஞ்சமாகிய ஜகத்து அநித்தியமென்றறிவதே நித்தியாநித்தியவஸ்துவிவேகம்.

இகவுத்திரார்த்தபலபோகவிராகமாவது.

இகத்திலே சிரச்சந்தனதிவனிதாபோகங்களாகிய வீடு-மாடு-குடும்பம்-தனதானியமுதலாகிய அஷ்டஐசுவரியத்தினிடத்திலும் பரத்திலோரம்பாமிர்தாதி போகங்களிடத்திலும் வந்திபசனமலமூத்திரபுரீட்சிலாதிகளிடத்திலும் இச்சையில்லாததுபோலவிடுவதே வைராக்கியம் இதுவே இகவுத்தியார்த்தபலபோகவிராகம.

சமாதிஷட்கசம்பத்தியாவது.

க்ஷமையென்றும்-தமையென்றும்- உபர்த்தியென்றும்-திதிக்ஷயென்றும்-சிரத்தையென்றும்-சமாதானமென்றும் ஆறுகும்.

இவையாறுக்கும்விவரம்.

க்ஷமையாவது மனோநிக்கிரகம்பண்ணுவதே க்ஷமை-பாக்கிய இந்திரியவிஷய நிக்கிரகம்பண்ணுவதே தமை-சகலசங்கையையும்விட்டு குருசேவைபண்ணுவதேஉபர்த்தி-சுகதுக்கங்களைச்சகிக்கிறதே - திதிக்ஷவேதாந்தசாஸ்திரசர்வர்ந்திரியாமியாகிய குருவினிடத்திலே நற்ற பிரதிவிசுவாசமே-சிரத்தை-புன்போமெ

ணமும் இந்திரியங்களும் எங்குஞ் சிதறிப்போகாமல் பகவந்தியானத்திலே நிறுத்துவதே சமாதானம் இவையேசமாதிஷட்கசம்பத்திகளாம்

## முமுக்ஷுத்வமாவது.

தலையிலே நெருப்பு பற்றினவனுக்கும் நாவரட்சி கண்டவனுக்கும் தண்ணீர்க்கரைகண்டாலல்லாமல் மற்றொரிடங்களிலும் மனதுசெல்லாததுபோல் மோட்சம் எப்போதுவரப்போகுதோவென்று அளவற்றவாசையினாலே ஜீவன்முக்தியடைந்து கிர்தகிர்த்தியனாகிறவரையில அதிதீவ்ரபுத்தியைக்கொண்டிருப்பதே முமுட்சுத்வமாகிய இந்நால்வகைச்சாதனங்களையும் உடையவர்களே மோட்சத்திற்கு அதிகாரிகளாகும்.

## குணத்திரயம்

### சுலோகம்

த்யச்யானம் தபோமெளனம் சுருதிதர்மம் கிரிட்சாம்உற்சாகம்நிஸ்தயம் தைரியம் சாத்மீககுணலட்சணம் கர்வக்குரோதணஹாங்காரம்சதிசங்கம்ப்ரானமணம் அப்ரியம் டம்பமாற்சரியம்ராச்யகுணலட்சணம் அக்யானமோக நிக்ரஸ்பாசாபல்யயம் புத்திஈனதாபாபேஷ்டிப்பராவர்த்திம் சுமகுணலட்சணம்

இவைகளிலே

சாத்ரிகம்- உத்தமம், ராஜசமத்திமம் - தாமஸம் ஆத்ம விவேகியானவர்கள் இவைகளைத் தப்பிடத்தே ஸேரவொட்டாமல் நிவர்த்திசெய்து சதாகாலமும் சாத்மிகத்தைப் பெற்றிருக்கக்கடவர்

தத்வத்திரயம்

மூர்க்க துஷ்டஜ்ஞானம் உச்சம் சித்தவாசிதம் பசங்கம் வயசஞ்சாம் தீர்க்கநதிக சேந்த்ரயுசலதுபிராந்தம் நிகில சகத்ருபம்

இதற்குவிவரம்

கானலினிடத்திற் சலப்பிராந்தியும் கிளிஞ்சலினிடத்தில் வெள்ளிப்பிராந்தியும் கயிற்றினிடத்தில் சர்ப்ப பிராந்தியும் சந்திரனிடத்தில் உபயசந்திரப்பிராந்தியும் எப்படித் தோற்றுகின்றனவோ அப்படிபோல் நித்யமே பஞ்சசொரூபானவர்-தன்னிடத்தில் மூலப்பிரகிருதி மகத்துவம் ஆங்காரதத்துவம் பஞ்சபூதங்களை கூடசூக்ஷ்ம ஸ்தூலாதி-ஜகத்பிராந்தி தோற்றப்படுகின்றன எனதோன்றுகின்றனவென்றால், அதிஷ்டான அஞ்ஞானத்தினாலேதான், இப்படித்தோற்றுகிறபிராந்திக்கு நிவர்த்தி எப்படியென்றால் கானலினிடத்திற்சலபகாலத்திரயத்திலும், கிளிஞ்சலிடத்தில் வெள்ளிகாலத்திரயத்திலும், கயிற்றினிடத்தில் சர்ப்பகாலத்திரயத்திலும்-சந்திரனிடத்தில் உபயசந்திரன்காலத்திரயத்தி

ளமளப்படியில்லையோ அப்படிபோல் அகண்டபரிபூரண அத்வைத ஆனந்தசொரூபமானவர் தன்னிடத்தே அதிஷ்டான அஞ்ஞானமூலப்பிரகிருதிமகத்துவ அகங்காரத்துவபஞ்சதன்மாத்திரைகள் சூட்சாதி ஸ்தூலாதி ஜகத்காலத்திரையத்திலும் இல்லவேயில்லை யில்லாசுபிரகாரத்து நிரூபிக்கிறோம்.

அஸ்தி-மாமிசம்-நரம்பு-தோல்-உரோமம்- ஆகிய இவ்வைந்தும் பிருதிவின்கூறாகும்.

உதிரம் சிறுநீர்-வெயர்வை-மச்சை-சுக்கிலம் ஆகிய இவ்வைந்தும் அப்புவின்கூறாகும்

பசி-தாகம்-நித்திரை-ஆலசியம்-சங்கவம் - ஆகிய இவ்வைந்தும் தேயுவின்கூறாகும்

கிடத்தல்-இருத்தல்-நிறுத்தல்-நடத்தல்-ஓடல் ஆகிய இவ்வைந்தும் வாயுவின்கூறாகும்

ஆசை வெட்கம்-பயம்-லச்சை-மோகம்-ஆகிய இவ்வைந்தும் ஆகாயத்தின் கூறாகும்

ஆக இவ்விருபத்தைந்தும் பலக்கருவிகளாம் பூர்வ ஜென்ம சமஸ்காரமாகிய பிராரத்வஜென்மத்தினாலே பஞ்சபூதாகாரமாக சுக்கிலசுரோணிதத்தினாலுண்டாகிய அன்னமயகோசம் இதுஸ்தூலதேகம்-இதன்மேல்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

அதத்யாசபாவது

சாதி நாமம்-ரூபம்-வர்னம்-குலம-கோத்திரம்- ஆசிரமம்-வேஷம்-பாஷை-ஸ்திரீ-புருஷன்-ஆயசு - கிரியை-விஸ்வன்-வியவாரிகன்-சிதாபாசனுன- அபிமானமும்-சாக்கிர-அவஸதை-நேத்திரஸ்தானம் யுக்தபோகம்-அகாரமாத்திரிகைரஜஸகுணமும்- கிரியாசக்தி-ஜீவத்வமும்-மனுஷத்வமும-ஜாடகோசமும்- ஐம்பாவவிகாரங்களு இவை முதலாகிய அகங்கர்த்தா-போகத்தவனாக்கும்-அத்யாசகற்பனைகளை ஏற்றிக்கழித்துநின்றது ஸ்தூலதேகம்

ஸ்தூலதேகமென்றறிந்து- அறிவுதன்னுலறியப்பட்ட இந்தஸ்தூலதேகம் தன்னை யறியமாட்டாதாகையால் ஜடம்தானல்ல-இந்தஸ்தூலதேகம்- பஞ்சீகிருதிபஞ்சபாபூதங்களிலுண்டானது இதனுல் வரப்பட்ட ஆனிவிர்த்திகளாகிய சுகதுக்கம் தனக்கு அக்கரையில்லை- இதுவேதானுல் இந்தஸ்தூலதேகம்போனுல் தான் போகவேண்டுமே அதுபே காமையால்தான் போகவில்லை ஆகையால் இந்தஸ்தூலதேகத்துக்குச் சாட்சியால் நிநதது அறிவாரும்

இனிசூட்சமதேகததில்-இருதயங்களிருக்கும் ஸ்தானகரண விவரம்.

ஆகாசத்திலாகாசம்-ஞாதுரு-ஸ்தானம் (புருவமத்தியம்) ஆகாசத்தில்-வாயு-சமானவாயு-ஸ்தானம் (நாபி) ஆ

காசததில்-தேயு - சுரோத்திரேந்திரியம்- ஸ்தானம் (செவி) ஆகாசத்தில் அப்பு (சப்தத்தன்மாத்திரை) ஆகாசத்தில் பிரிதிவுவாக்கேந்திரியம்-ஸ்தானம் - வாக்கு ஆக இவ்வைந்தும் ஆகாயபஞ்சகிர்த்தி.

வாயுவிடத்தில் ஆகாசம்-மனம்-ஸ்தானம் (கண்டம்) வாயுவிடத்தில்-வாயுவியானவாயு ஸ்தானம் (சர்வாங்கம)வாயுவிடத்தில்-தேயு-துவக்கேந்திரியம் ஸ்தானம் (துவக்கு) வாயுவிடத்தில-அப்பு (பரிசதன்மாத்திரை) வாயுவிடத்தில் பிரிதிவு-பாதேந்திரியம்-ஸ்தானம் (பாதம்) ஆக இவ்வைந்தும் வாயுபஞ்சகிர்த்தி

தேயுவிடத்தில்-ஆகாசம்-புத்தி-ஸ்ஙானம் (நேத்திரம்) தேயுவிடத்தில-வாயு உதானவாயு ஸ்தானம் (கண்டம) தேயுவிடத்தில்-தேயு-சட்சேந்திரியம்- ஸ்தானம்(நேத்திரம) தேயுவிடத்தில்-அப்பு (ரூபதன்மாத்திரை) தேயுவிடததில்-பிரிதிவுபாணி இந்திரியம்-ஸ்தானம் (அஸ்தம்) ஆக இவ்வைநதும்-தேயுபஞ்சகிர்த்தி.

அப்புவினிடத்தில்- ஆகாயம்-சித்தம் - ஸ்தானம் (நாபி) அப்புவினிடத்தில் வாயு-அபானவாயு-ஸ்தானம (குதம்) அப்புவினிடத்தில்-தேயு-சிங்குவை- இந்திரியம-ஸ்தானம் (நாவு) அப்புவினிடத்தில்-அப்பு (ரசதன

மாத்திரை) அப்புவினிடத்தில்-பிரிதிவு - குய்யேந்திரிய
ம்-ஸ்தானம் (குய்யம்) ஆக இவ்வைந்தும் அப்பு பஞ்ச
கிர்த்தி.

பிரிதிவியினிடத்தில்-ஆகாசப், ஆங்காரம்- ஸ்தான
ம்(இருதயம்)பிரிதிவியினிடத்தில் வாயு - பிராணவாயு
ஸ்தானம்-இருதயம்-பிரிதிவியினிடத்தில் தேயு- பிரா
ணேந்திரியம்-ஸ்தானம் (நாசி) பிரிதிவியினிடத்தில்
(அப்புகந்ததன்மாத்திரை) பிரிதிவியினிடத்தில் பிரிதிவு
பாயுரு இந்திரியம்-ஸ்தானம் (குதம்) ஆக இவ்வைந்து
ம பிரிதிவுபஞ்சகிர்த்தி.

ஆக இருபத்தைந்து தத்துவமும- அபஞ்சீகிர்த பஞ்
சமாபூதங்களினாலே உண்டான பஞ்சகிர்திகளாம.

இனிசூட்சுமதேகவிவரம.

சப்ததன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினாலே உ
ண்டானது (ஞானம) சப்ததன்மாத்திரை ரசோமசசம
ட்டியினாலே உண்டானது (சமானவாயு) சப்ததன்மாத
திரை-சாத்மீகாம்சவியஷ்டியினாலே உண்டானது(சுரோ
த்திரேந்திரியம) சப்ததன்மாத்திரைவிஷையம (சப்த
மாத்திரை) ரசோம சவியஷ்டியினாலே உண்டானது வாக
க்கேந்திரியம் ஆக இவ்வைந்தும சப்ததன்மாத்திரையி
னலானவைகள் ஆதலால் சப்ததன்மாத்திரைகள் விரூ
வமில்லை.

பரிசதன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினு

லே உண்டானது (மனது) பரிசதன்மாத்திரை ரசோ மச சமஷ்டியினாலே உண்டானது (வியானவாய) பரிசத ன்மாததிரை சாத்மநாமச வியஷ்டியினாலே உண்டான து (துவக்கேந்திரியம்) பரிசதன்மாததிரை விஷயம் பரி சனதன்மாததிரை ரசோமச வியஷடியினாலே உண்டா னதுபாகேநதிரிபம மனதுவியானவாயு துவக்கேந்திரி யமபரிசவிஷயம பாகேநதிரியம் ஆக-இவ்வைந்தும் ப ரிச தன்மாததிரையினாலே ஆனதுகள் ஆதலால் பரிச த ன்மாத்திரையை விருவவில்லை.

ரூப தன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினாலே உண்டானது (புத்தி) ரூப தன்மாததிரை-ரசோமச சம ஷ்டியினாலே உணடானது (உதானவாயு) ரூபதன்மாத திரை சாத்மீகாமச வியஷடியினாலே உண்டானது (சட்சேநதிரியம்) ரூபதன்மாததிரைவிஷயம ரூபதன்மா ததிரை-ரசோமச வியஷ்டியினாலே உண்டானது (பா ணி இந்திரியம)புத்தி உதானவாயு சட்சேநதிரியம ரூப விஷயமபாணிஇந்திரியம ஆகிய யில்வைந்தும் ரூப தன்மாத்திரையினால் உண்டானவைகள் ஆதலால் ரூப தன்மாததிரையை விருவவில்லை.

ரசோதன்மாத்திரை-சாத்மீகாம்ச சமஷ்டியினாலே உண்டானது (சித்தம) ரசோதன்மாத்திரை ரசோம்ச சம

ஷ்டியினாலே உண்டானது (அபானவாயு) ரஜோதன்மாத்திரை சாத்மீகாம்ச வியஷ்டியினாலே உண்டானது (சிங்குவையிந்திரியம்) ரசோதன்மாத்திரைவிஷயம் ரசோதன்மாத்திரை ரசோம்சவியஷ்டியினாலே உண்டானது (குய்யேந்திரியம்) சித்தம் அபானவாயு சிங்குவை இந்திரியம் ரசோவிஷயம் குய்யேந்திரியம் ஆகிய இவ்வைந்தும் ரசோதன்மாத்திரையினாலே உண்டானவைகள் ஆதலால் ரசோதன்மாத்திரையை வினாவில்லை.

கந்ததன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினாலே உண்டானது ஆங்காரம் கந்ததன் மாத்திரை ரசோம்ச சமஷ்டியினாலே உண்டானது (பிராணவாயு) கந்ததன் மாத்திரை சாத்மீகாம்ச வியஷ்டியினாலே உண்டானது (கிராணேந்திரியம்) கந்ததன்மாத்திரை விஷயம் கந்த தன்மாத்திரை ரசோம்சவியஷ்டியினாலே உண்டானது (பாயுருஇந்திரியம்) ஆங்காரம் பிராணவாயு கிராணேந்திரியம் கந்தவிஷயம் பாயுருஇந்திரியம் ஆக இவ்வைந்தும் கந்ததன்மாத்திரையினாலே உண்டானவைகள் ஆதலால் கந்ததன்மாத்திரையை வினாவில்லை

ஆகிய இருபத்தைந்து தத்துவமும் பஞ்சதன்மாத்திரைகளாலே உண்டானதுகள் ஆதலால் பஞ்சதன்மாத்திரையை விளங்கவிலை.

இனியிதனை யவிக்கையாக சேர்த்துபண்ணுகிற விவரமெப்படியென்றால்.

வாக்கு—பாதம் பாணி-குய்யம்-பாயுரு- எனப்படுகின்ற கன்மேந்திரியங்களைந்தும் வசனம் கமனம்- தானம்-ஆனந்தம்-விசர்ச்சனம்- எனப்படுகின்ற ஐந்துவிஷயங்களை விருந்தும் தன்னைத் தான் அறியாமலிருக்கிறபடியினாலே சுரோத்திரேந்திரியம் சப்தத்தினாலே வாக்கேந்திரியத்தை அறியப்பட்டது.

தொக்கு-அல்லது துவக்கேந்திரியம் பாசத்தினாலே பாதேந்திரியத்தை அறியப்பட்டது.

சட்சேந்திரியம் ரூபத்தினாலே பாணி இந்திரியத்தை அறியப்பட்டது.

சிங்குவை யிந்திரியம் ரசத்தினாலே குய்யேந்திரியத்தை அறியப்பட்டது.

கிராணேந்திரியம் கந்தத்தினாலே குதேந்திரியத்தை அறியப்பட்டது.

யூகவாக்காதி கன்மேந்திரியபஞ்சகத்தை அறியப்பட்ட சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமேதான் தன்னையறியப்பட்ட இந்தக் கன்மேந்திரியங்கள் தன்னை

யறியமாட்டா தாகையால் சடம் தானல்ல இந்தக் கன்மே
ந்திரிய பஞ்சகம பஞ்சதன்மாத்திரைகளுடைய ரசோம
சவியவடிவிலே உண்டானது இதுகளால் வயபபட்ட
ஆன்னி விர்த்திகளாகிய சுசதாககம தனக்ருதமேதவையிலெ
லெ திவைகளே தாறுறை இவைகளே போறுதான போ
கமேவண்டிய இவை ள போறுடைய தான போகவிலலே ஆ
கையால இவைகளுநதச சாடசியாய நிநத சுரோத்திரா
தி ஞானேந்திரிய பஞசகசெசாம.

இனி சுரோத்திராதிஞானேந்திரியங்களுக்கு
ம ர சாதி விஷயங்களுக்குத் மிருதுவா கனமாக தானறி
யாதிருக்கிறபடியால ஆகாச பிராணவாயுவினோடேகூ
டி கிராணேந்திரியத்துவாரசசங்களை அறிகிறது சித்தம

அபான வாயுவினோடேகூடி சிரநதவை அலைதல் சிங்
குளவை இந்திரியம துவாரசஙகளை அறியபபட்டது
புத்தி.

உதான வாயுவினோடேகூடி சட்சேந்திரிய துவாரரூ
பங்களை யறியப்பட்டது மனம.

வியான வாயுவினோடேகூடி துவக்கேந்திரிய துவார
பரிசங்களை அறியப்பட்டது ஞானம.

சமான வாயுவினோடே கூடி சுரோத்திரேந்திரிய
வர்சுப்தங்களை கூறப்பட்டது.

# வேதாந்த ஸித்தாந்தம்.

பிராணாதி வாயுக்களைந்தும் சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்தும் சப்தாதி விஷயங்களைந்தும் ஆக-இருபதினைந்தையும் அறியப்பட்ட ஞானேந்திரியாந்தக்கரண பஞ்சகமான கலைனையறியப்பட்ட இப்படியைந்தும் தன்னையறியமாட்டாதாகையால் சடம் தானல்லவோ இப்படியைந்தும் பஞ்சதன்மாத்திரைகளுடைய ரசோபஞ்ச சமஷ்டியினாலேயும் சாத்விகாபஞ்சவியஷ்டியினாலேயும் உண்டானது பூதங்களினாலே வரப்பட்ட ஆனிவிர்த்திகளாகிய சுகதுக்கம் தனக்கு அவசியமில்லை இவைகளே காதானாலே இவைகள் போனால் நான் போகவேண்டிமே இவைகள் போனாலும்தான் போகவில்லை ஆகையால இவைகளுக்குச்சாட்சியாயிருந்த ஞானதி அந்தக்கரணபஞ்சகங்களே தானாகும்.

இனி மனமென்றால் சங்கற்பம் புத்தியென்றால் நிச்சயம் சித்தமென்றால ஆலோசனை ஆங்காரமென்றால் அபிமானம் இவைகளையறிகின்ற ஞானத்துக்கு சங்கற்பமும் நிச்சயமும்ஆலோசனையும் அபிமானமுமில்லை ஆகையால வாக்காதி கன்மேந்திரியங்களைந்து சப்தாதி விஷயங்களைந்து சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்து பிராணாதி வாயுக்களைந்து மனாதி யந்தக்கரணங்களாலு ஆக-இருபத்தைந்து தத்துவமே க்ஷேத்திரம் இவ்

ஸ்ரூபத்துநாலு தத்துவத்திற்கும் சாட்சியாயறிந்த அறிவே க்ஷேத்திரன் இவையோ அனாத்மா இவைகளுக்குச சாட்சியாயறிந்த அறிவே ஆத்மா இவைகளே பிரகிருதி இவைகளுக்குச் சாட்சியாயறிந்த அறிவே புருஷன்.

## இனி கூடசமதேக அத்தியாசங்களை நிரூபிக்கிறோம்.

### அத்தியாசமர்வநு.

தைசசனென்றும் பிராதிபாசகனென்றும் சுவப்பனக் கற்பிதனென்றும்-அபிமானமும்- கண்டஸ்தானமும்-சுவப்பனவஸ்தையும்-சுவேச்சாபோகமும்-உசாரமாத்திரையும்-சாத்விககுணமும்-இச்சாசக்தியும்-பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமய கோசங்களும் நான் பேசுகிறவன்-ஊமையென்றும்-நான் கொடுக்கிறவன்-கையில்லாதவனென்றும்- நானடக்கிறவன்-முடவனென்றும்-நான் சிறுநீர் மலம் விசர்ச்சனை பண்ணுகிறவனென்றும்-ஆகிய வாக்காதி கன்மேந்திரியங்களுடைய அத்தியாசங்களும்-லௌகிக வைதிக-சப்தபோதனங்களும் சீதளம் உஷ்ணம் மிருது-கடினபரிசபேதங்களும் நீலம் பீதம்-சுவேதம்-ரத்தம்-அரிதரூபபேதங்களும்-தித்தித்

தல்-புளித்தல்-கசத்தல்-துவர்த்தல்-கூர்த்தல்-கார்த்தல்-ஆகிய ருசிபேதங்களும்-நற்கந்தம்-துற்கந்தம்-ஆகியகந்த பேதங்களும் சப்தாதிபஞ்சவிஷயங்களினுடைய அத்தியாசங்களும்-நான்கேட்கிறவன் - செவிடனென்றும் நான் பரிசமுடையவன் -திமிருடையவ னென்றும்-நான் பார்க்கிறவன்-குருடனென்றும்-நான் ருசியறிகிறவன் அரோசிகனென்றும்-நான் கந்தமறிகிறவன்-மூக்கறுப்பனென்றும்-ஆகியஞானேந்திரியங்களுடைய- அத்தியாசங்களும்-நான்பசிதிபனமுடையவன்-பசியில்லாதவனென்றும்-நான் தாகமுடையவன் தாகமில்லாதவனென்றும் நான் சக்தியுடையவன்-நான் பலமில்லாதவனென்றும்-நான் வீரமுடையவன் - வீரமில்லாதவனென்றும் நான் தும்முகிறவன் இருமுகிறவன் விக்கலெடுக்கிறவன்-நான் வாந்தி யெடுக்கிறவன்-கொட்டாவி விடுகிறவன் கண்ணிமைப்பை மூடத்திறக்கச்செய்கிறவனை நான் யோகி-அடவாதி-நான்-ஆகாச கமனம் பண்ணுகிறவன். என்று சொல்லப்பட்ட தசவாயுக்களினுடைய-அத்தியாசங்களும்-நான் சங்கற்பவான்-விகற்பவான்-புத்திமான் நிச்சயவான்-சபலன்-சாஞ்சலியன் யோசனையுடையவன்-ஆங்காரிஉக்கிரனென்றும் சம்சிய-நிச்சயம்-சாஞ்ச

ல்ய அபிமான மாகிற-அந்தக்கரணங்களினுடைய அத்தியாசங்களும வைராக்கியம பொறுமை சாதவிகத்திற்கு காமக்குரோதம் ரஜஸினுக்கு சோம்பல் நித்திரை தாமசத்திற்கு—ஆகிய- குணத்திரைய அத்தியாசங்களும்—வர்ணபிரமைஆசிரமப்பிரமை சரியைகிரியை-யோக-முதலாகிய ஆடம்பரபிரமை—மந்திரபிரமை-தந்திரபிரமை மூர்த்திபிரமை தீர்த்தப்பிரமை—ஸ்தலபிரமை - நவக்கிரக திதி-வார-நட்சத்திரயோகவிரத உபவாச—தெய்வ-புண்ணியஸ்தோத்திரம் காலதேக — கீர்த்தி இக-பரலோக—சௌக்கிய பிரமைகள்முதலிய அததியாசபிரமைகளை ஏற்றிக்கழித்து நின்றது சூட்சமதேகம்— இந்தசூட்சம சரீரம் தானல்லாதபடியினாலே இதனுடைய அததியாசங்கள் தனக்குத் தேவையில்லை இந்தசூட்சம தேகம மாத்திரைகளினாலே உண்டானது இவைகளால வரப்பட்ட ஆனிவிர்த்திகளாகிய சுகத்துககும் தனக்கவசியமில்லை— இவையேதானானால் இந்தசூட்சமசரீரம்போனால தாம் போகவேண்டுமே இந்தசூட்சமசரீரம் இதானாலும் தானப்படிக்குப்போகவில்லை ஆகையால்இந்த சூட்சம சரீரத்திற்குச்சாட்சியாயிருந்த அறிவேதான

இனிபஞ்சதன்மாத்திரைகளை விசாரிப்போமா அதுவ யில்லையென்றறிவது எப்படியென்றால் ரசதன்மா

ததிரையிருலே உண்டான கந்ததன்மாத்திரை ரசதன் மாததிரையை விருவ வில்லை யென்றறிவதுதான்.

ரூபதன்மாத்திரையிருலே உண்டான ரசதன்மா த்திரை ரூபதன்மாத்திரையை விருவவில்லையென்றறி வதாம்.

பரிசதன்மாத்திரையிருலே உணடானது ரூபக ன்மாத்திரை சப்ததன்மாததிரையை விருவவில்லையெ ன்றறிவதுதான்.

சப்ததன்மாத்திரையிருலே உண்டான பரிசதன் மாத்திரை சப்ததன்மாத்திரையை விருவவில்லை யெ ன்றறிவதுதான்.

ஆங்காரதத்துவத்திரு லுண்டான சப்ததன்மாத் திரை ஆங்காரததுவத்தை விருவவில்லை யென்றறி வது.

பஞ்ச தன்மாத்திரைகள் காலத்திரை யத்திலும் இல்லைவேயில்லை.

தாமோகுணப் பிரதானமாகிய ஆங்காரத்துவமே காரண சரீரமென்னப்பட்டது அந்தக்காரணசரீரத்தை விசாரிப்போமாக.

அதாவது.

பஞ்சதன்மாத்திரைகளைத் தனித்தனியே உற்பத்தியானபடி யாலோசித்து லயப்படுத்திப்பார்க்குமிடத்து

சேஷிட்சாண வந்தியாபுத்திர கேசசாணாவிந் தமித்தியா புருஷன்போல இல்லாமற்போன படியால் இது ஒன்றுமில்லையென்றும் தோன்றவில்லையென்றும் ஆவகாரத்துவமென்றும் அஞ்ஞானமென்றும் அவித்தையென்றும் பிரகிருதியென்றும் தமசென்றும் ஸ்தூலசூட்சம சரீரங்களுக்கு ஏதுவாகி காரணமாய்ப்பிறப்பித்ததினாலே காரணசரீரமாச்சுது இதனுடைய அத்தியாசங்களை நிரூபிக்கிறோம்.

அதாவது

பிராக்கியனென்றும் பாரமார்த்திகனென்றும் அவச்சுன்னனென்றும்-அபிமானமும்-சுழுத்தியவஸ்தையும்-இருதயஸ்தானமும் ஆகமாலந்தபோகமும் மகாரமாத்திரையும்-தாமசகுணமும் திரவியசத்தியும்- ஆநந்தமயகோசமும்-நான்சுகி-துக்கி மூடன்-அவிவேகி பிராந்தன்-பாவி-சேடன்-அஞ்ஞானி ஒன்றுக்குமாகாதவன் கெட்டுப்போனவன் எனகிற இவைமுதலான பிராந்திசன்னிய அத்தியாசநாமங்களை யறிந்துகழித்துநின்றது

காரணதேகம்-இந்தக்காரணதேகம் தானல்லாதபடியினு லே இதனுடைய அத்தியாசங்கள் தனக்குத் தேவை யில்லை-இந்தககாரணதேகம் மகத்துவத்தினுலே உண் டானது இதனுல்வைப்பட்ட ஆனி விர்த்திகளாகிய சுக துககம், தனக்கவசியமில்லை இந்தக்காரணதேகமேதானு னுல் இதுபோனுலதான் போகவேண்டுமே இதுபோ னுலுமநான் போகவில்லை அதெப்படி போகவில்லையெ ன்றுல் சமாதிநிஷ்டையிலே சுகப்திகளாசக்தாமாத்திர மப் பிரபஞ்சந்தோனுமல் பிரமஸ்ருபமேதாஞயிருக்கி றபடியினுலே தான்போகவில்லை ஆகையால் இந்தக்கார ணதேகததுக்கு சாட்சியாயறிந்த அறிவேதான் இந்த ஸ்தூலசூட்சம காரணசரீரத்தினையும் மாயையினுலே பொய்யாய்க் கற்பிதமாய்ப் பிரகையாய் உண்டானது இ தைக்குறித்துவநத அத்தியாசங்களும் ஆபாசங்களும் கர்மகாண்ட சப்த-தர்க்க-மீமாம்ச-யோக-ஞான -வேத ஆகம புராணங்களாகிய கிதாசாஸ்திரங்களும் இவைமு தலாகிய சகல சங்கற்பபிராந்திகளும் -சேஷ விக்ஷாணவ தியாபுத்திராகேசஞாவிதமித்தியா புருஷன்போலவே கிஷபிரபஞ்சஸ்வருபஞனை தன்னிடத்தில் காலத்தினா யதிலும்-இல்லவேயில்லை.

மகாகாரணம்.

தனித்த ஆத்மாவிற்கே மகாகாரணசரீரமென்றும்,
கூடஸ்தனென்றும், சித்தென்றும், சைதன்னியமென்று
ம், சாட்சியென்றும், பெயர்களாம். இந்தச் சாட்சியெ
னப்படுகின்ற பிரபஞ்சத்தைக்குறித்து சாஞ்சியாகிய ச
த்து அகண்டாகாரவிர்த்தியென்றும், ஆனந்தவிர்த்தி
யென்றும்-போதாங்குரமென்றும், தோணமென்றும்,
ஓங்காரமென்றும், இவைமுதலானவைகள் வியஷ்டி ச
மஷ்டி ஸ்வரூபமான சகத்தைக்குறித்துவந்த அகண்
டாகார விர்த்தியுடனேகூடியிருக்கிற மூலப்பிரகிருதி
யென்கிற மகாகாரணசரீரம் தானல்ல அதுவெப்படியெ
ன்றால் துவஷ்டீம தாவதனையாகிய அதீதவிவேகத்
தில் இந்த மகாகாரணசரீரம் இல்லாமற்போனால் தானெ
ன்கிற பிரதியிலாமல் தானாயிருக்கிறபடியினாலே இந்த
மகாகாரணசரீரம்தானல்ல இந்த மகாகாரணசரீரம அத
தியாசங்களை நிரூபிக்கிறோம.

அதாவது.

பிரத்தியேகாத்மாவென்றும் கூடஸ்தனென்றும்சர்வ
சாட்சியென்கிற அபிமானமும் துரியாவஸ்தையிருக
தன்னியமென்கிற பிரமாண்ட அதீதஸ்தானமும், ஆன
ந்தபோகமும்-ஓங்காரமாத்திரையும் சத்தசத்துவகுண

றும் ஞானசக்தியும் பின்னும் சர்வக்கியானென்றும ச
ர்வேஸ்வரனென்றும் சர்வகாரணனென்றும், சர்வாந்திரி
யாமியென்றும், சர்வசிருஷ்டி-சர்வதிதி - சர்வசங்கார
ம-வென்றும- பின்னும் தானே சர்வமென்றும் தன்னு
டையகற்பனையே சகமென்று சர்வத்தினிடத்தில தா
னேயருசமாயிருக்கிறவனொன்றும இவைமுதலிய சர்வ
ஸ்வ்ருதி அத்தியாசனாமங்களும் இதைக்குறித்துவந்த அ
பாசங்களும இதைக்குறித்துச சொல்லப்பட்ட வேதா
கம புராண கலை ஞானிக சாஸ்திரம் தர்க்கமீமாம்ச யோ
கஞான சர்வ சாஸ்திரங்களும இந்தசாஸ்திரங்களுக்கு
(ஏது வாகிய மகாவாக்கியங்களும்)இவைமுதலாகிய அக்
கியங்கள் சேஷவிக்ஷாணவந்தியாபுத்திர கேசுரவி
ந்த மிருதியா புருஷன்போல் காலத்திரயத்திலும் த
ன்னிடத்தில் இல்லவேயில்லை (அதெப்படியென்றால்)
இந்தசாட்சாதத்துவமாகிற மகாகாரண சரீரம் சாட்சமெ
னப்படுகிற பிரபஞ்சத்தைக்குறித்து வந்ததேயல்லாமல்
விசாரிக்குமளவில தன்னிடத்தில் காலத்திரயத்திலு
ம் இல்லவேயில்லை இருக்கிறதி[illegible]க்குஆகையால் சா
ட்சி சாட்சிரகிதமாக பந்தம் மோட்சரகிதமாய் காரியம்
காரணரகிதமாய் நினைப்பும் மறப்புமில்லாமல் துவ்ந்த
னிதம் பூதனாயிருக்கிற அதீதவிளக்கமாகிய ஸ்வரூபம்

குருவாக்கியத்தினாலே தானென்றறிந்தே மூலப்பிரகிரு திரகிதமான தன்னுடைய ஸ்வரூபம் இதறகுச சமதி வசனம ஞானம்-சுஷுவு-பரவுமாம அதெப்படியென் றால் தானென்றறிந்த அறிவே தானெனசுஷுவு அது தானென்று சொல்லும் மறதியேபரவென்றும இராம ஸ்வாமசத்திலே வியாசரிஷி நிரூபித்திருக்கிறார் பின்னு ம் அறிவேனென்கிற நினைவும அறியேனென்கிற மற தியும இவ்விரண்டுமில்லாமல் நடுவாகவிளங்குவதே நிச நிதயானந்தமென்றும தத்தாத்திரேயயோகீசுவரர் நிரு பித்திருக்கிறார.

பின்னும் பூர்வாசாரிகளாயிருந்த ஆசாரிய சுவாமிக ள் முதலான மகாத்துமாக்கள் மகாமுனிகளும் ரிஷீசு சுவரர்களும் இதுவே பிரமாணமென்று நிரூபித்திருக்கி றார்கள் இதுவே வேதாந்தரகசிய சித்தாந்தம.

துக்கநிவர்த்தி.

தாபத்திரையங்களினாலே தவிக்கின்ற துக்கம் எப் போ தொழியுமென்றால சரீரம்போனால் துக்கம்போ ம், சரீரம்எப்போதொழிந்துபோகுமென்றால கர்மமில் லாமல்போனால் கர்மம் எப்போதொழியுமென்றால் ராக துவேஷாதிகளில்லாமற்போனால், ராகதுவேஷாதிகள் எ

தோடுகூடிய சைதன்னியம் பிரமாத்துரு சைதன்னி
யமாம் அந்தக்கரணவிர்த்தியோடுகூடின சைதன்னிய
ப பிரமாணசைதன்னியமாம் இந்திரியங்களோடுகூடின
சைதன்னிய பிரமேயசைதன்னியமாம் இந்திரியவிஷ
யங்களோடுகூடின சைதன்னிய பலசைதன்னியமாம்
இந்தபிரகாரம் அகண்டபரிபூரணமாய் அத்வைதமாய்
விளங்கப்பட்ட பரமாத்ம ஸ்வரூபத்துக்கு உபாதிபே
தங்களாலே இப்படிக்கு எழுவிதமாய் சொல்லப்பட்ட
து. அந்த உபாதிகளைத்தள்ளி அத்வைதஆனந்த பரி
பூரணஸ்வரூபமான பரமாத்மாவே தானென்று யாரறிஞ்
ஞர்களோ அவர்களே கிருதார்த்தர் அவர்களே வித்வா
மிசர் மெய்ஞ்ஞானிகள் அவர்களே சீவன்முத்தர்கள்
என்றுவேதாந்த சாஸ்திர சித்தாந்தம்.

## பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம்

## முற்றுப்பெற்றது.

ப்போகொமியுமென்றால அபிமானமில்லாமற்போனால அபிமானமெப்போதில்லாமற்போகுமென்றால அவிவேகமில்லாமற்போனால அவிவேகமெப்போதில்லாமற்போகுமென்றால் அஞ்ஞானமில்லாமற்போனால அஞ்ஞானமெப்போதில்லாமற்போகுமென்றால் பிரமதாந்தம அபரோட்சமாய் அத்வைத ஆத்மக்கியானம உதயமானால

ஞானமெப்படி வருமென்றால அதிக சிரத்தாபக்தியுடனே சாதன சதுஷ்டயசம்பத்தியுண்டாகி சர்ச்சங்கமூலமாயச சர்க்குருவினிடத்தில சதகாலசேஷமாய்சிரவண மனன நிரதத்தியாசனத்தினாலே ஆதமா அனாத்மா விசாரஞ்செய்தால ஆத்மக்கியானம உண்டாகும-மற்றப்படி எதனாலும உண்டாகமாட்டாது-மெய்ஞ்ஞான அருளாகிய ஆரூபஞானம உதயமானால் அஞ்ஞானம் கிலேசமுமில்லாமல அடியோடுமுழுவதும் அழிந்துபோம

அஞ்ஞானம்போனால் அவிவேகம்போம் அவிவேகம்போனால் அபிமானம்போம் அதுபோனால் ராகத்வேஷாதிகள்போம (அதுபோனால்) கன்மம்போம்,அதுபோனால் சன்மம்போம அதுபோனால் துக்கம்போம அதுபோனால சுயம்பிரகாசமான சொரூப சாட்சாத்காரமேயாவன்.

## ஆத்மா அநாத்மாவுக்குலட்சணம்

மூன்று காலத்திலேயும் மூன்றவஸ்தையிலேயும் ஒருவிதமாயில்லாதபடியினாலே அசத்துலட்சணம் தானுந் தோன்றாமல் ஒருவருக்குந் தோற்றுவிக்காமலுமிருக்கிறதே சடலட்சணம்.

ஆதியாத்மீக-ஆதிபௌதிக ஆதிதெய்விகங்களினாலே வருகிற தாபதிரையங்களே துக்கலட்சணம் பூருவயதுக்குமேல் ஸ்தூலதேகமில்லைபிரளய காலத்தில் சூட்சுமதேகமில்லை ஜீவன்முக்தியில் காரணதேகமில்லை ஆகையால் அநித்தியலட்சணம் ஒன்றுமிராமல் ஜீவராசிகளுக்கும் தேகங்களாகி அண்டபிண்ட சராசரங்களாயிருக்கிறபடியினாலே கண்டிதலட்சணமென்று சொல்லப்படும்அசத்து சடம்- துக்கம்-அநித்தியம்-கண்டிதம்- ஆகியஇவ்வைந்தும் அநாதமாவுக்கு லட்சணமாம்.

## ஆத்மாவாவது.

மாயாசக்திக்கு ஆதாரமாயிருக்கின்ற அத்வைதானந்த சைதன்னிய சொரூபமே ஆதமாவென்று சொல்லப்படுகிறது-இதற்குலட்சண மெப்படியென்று திரிகாலத்திலும் மூன்றவஸ்தையிலும் ஒருதாமல்

ணைகயால் சதானலட்சணம் மூலையிட்டிலே முக்காடிட்டுக் கவிழ்ந்துபடுத்துக் கண்ணைமூடிக்கொண்டிருந்தாலும் சூரிய சந்திர நட்சத்திர அக்கினிப்பிரகாசங்களாகிய சாதனைங்களில்லாமல் புத்திதெரிந்ததுமுதல் இதுவரையில் நடந்தவிஸ்தாரங்களெல்லாம் நினைக்குமனதில் தன்னிடத்தில் பிரத்தியட்சமாய்த் தோன்றுகிறபடியினாலே சித்து லட்சணம் சகலவுயிர்கள் சமஷ்டியாக சுழுத்தியவஸ்தையி லிருக்கிறபடியினாலே ஆனந்தலட்சணம் ஒருகாலத்திலும் அழியாதபடியினாலே நித்திய லட்சணம்-எங்கும் வியாபகமாய் நிரஞ்சனமானதினால்-பரிபூரண லட்சணம்-சத்து சித்து-ஆனந்தம்-நித்தியம்-பரிபூரணம்-ஆக இவ்வைந்தும் ஆத்மலட்சணம்

பிறக்கிறதும் இறக்கிறதும் ஸ்தூலதேகத்துக்கு பசி-தாகம்-பிராணவாயுவிற்கு-சுகம்-துக்கம் -மனதிற்கு ஆக இவ்வாறுகாரியமும் ஆத்மார்த்தம்போல் தோன்றுகிறதுமாத்திரமேயல்லாமல் ஆத்மாவுக்குச் சம்பந்த காலத்திலேயும் அது எத்தன்மையே னமுமல் ஆகாசத்தில் மேகம் ஓடுகையில் சந்திரன் ஓடுதென்கிறதுபோல் சொல்மாத்திரமே ஆத்மா நித்திய திப்தியாய் சிதானந்த சுகஸ்வரூபியாகிய சுயம்பிரகாசமாய ஆத்மாவென்று அறியப்பட்டவர்களெவர்களோ அவர்களே சீவன்முக்தர்கள்

அதிகாரிவிசேஷம் நித்தியாநித்திய வஸ்துவிவேகம் உண்டான சிஷியனுக்கு குரு அறிவி னுபதேசம்பண்ணுகிற லக்ஷணம்.

நித்தியா நித்தியவஸ்து விவேகமாவது பிரமமேநித்தியம் ஜகம் அநித்தியமென்றறிக.

இகவுத்திரார்த்த பலபோக விராகமாவது இகபர போக அபேக்ஷையில்லாம லிருப்பது.

சமாதிசட்கசம்பத்தியாவது

சமம் மனோநிக்கிரகம் தமம் பாக்கிய இந்திரியநிக்கிரகம் உபாதி சகலகன்மங்களையும் விட்டிருப்பது திதிக்ஷையாவது—சுகதுக்கங்களைச் சகிக்கிறது—சிரத்தை—குரு—வேதாந்தசாஸ்திர தேவதையினிடத்தில பிரதிவிசுவாசமுண்டாயிருப்பது.

சமாதானம்—மனப்பிரவிர்த்தியாகிய இந்திரியப்பிரவிர்த்தியில்லாமல் யோகாக்கிரசித்தனாயிருப்பது, முமூக்ஷுத்வம் சீக்கிரத்தில் மோட்சத்தை யடையவேண்டுமென்கிற அபேக்ஷையாயிருப்பது.

இப்படிக்கொத்த அங்கத்துடனே கூடி. விளங்கப்பட்ட சாத்விக புருஷனுக்குக் குருவானவர் திருவுளம்பற்றுகிறார்

அஃதாவது.

ஸ்தூல-சூட்சும-காரண மென்கிற இம்மூன்றும் சரீரத்திரையம், சாக்கிரம்-சொற்பனம்-சுழுத்தி யென்கிற இம்மூன்றும் அவஸ்தாத்திரையம், நேத்திரம்-கண்டம்-இருதயம் ஆக இம்மூன்றும் ஸ்தானத்திரையம், விசுவ-தைசச-பிராக்கிய இம்மூன்றும் அபிமானபுருஷத்திரையங்களாம், ராஜசம்-தாமசம்-சாத்வீகம் இம்மூன்றும் குணத்திரையம் ஆணவம்-மாயை-காமியம் இம்மூன்றும் மலத்திரையம் சகசதாதாத்மிகம்-கர்மதாதாத்மிகம்-பிரார்த்தின சந்தனனியதாதாத்மிகம் இம்மூன்றும் தாதாமாத்திரையம், சாஸ்திரவாசனை-தேகவாசனை-லோகவாசனை இம்மூன்றும் வாசனாத்திரையம், ஆத்மதத்துவம்-வித்தியாதத்துவம்-சுகதத்துவம் இம்மூன்றும் தத்துவத்திரையம், வருங்காலம்-இறந்தகாலம்-நிகழ்காலம் இம்மூன்றும் காலத்திரையம், காமம்-பக்தி-வைராக்கியம்-இம்மூன்றும் கன்மத்திரையம், சிரவணமனன-நித்தியாசனம்-இம்மூன்றும் சாதனத்திரையம், மன-மனன-மன்னியம்-இம்மூன்றும் சங்கற்பத்திரையம் ஆகாமியம்-சஞ்சிதம்-பிராரத்வம்-இம்மூன்று

ம் பிராரத்துவத்திரையம், புண்ணியகன்மம்- பாவகன்மம்-மிசர்க்கன்மம் இம்மூன்றும் கன்மத்திரயம், ஆதியாத்மீகம்-ஆதிபௌதிகம்- ஆதிதெய்வீகம் இம்மூன்றும் தாபத்திரையம், மனம்-வாக்கு-காயம் இம்மூன்றும் திரிவிதகரணம், நாதம்-பிந்து-கலை இம்மூன்றும் பிந்துத்திரையம், சர்ச்சங்கம்-ஈர்ச்சங்கம்-மத்தியசங்கம்- இம்மூன்றும் சங்கத்திரையம், விராட்டு-இரணியகர்ப்பம்-அவ்வியாகிருதம் இம்மூன்றும் ஈஸ்வரமாயா, உபாதிசரீரத்திரையம்-சம்சயம்-அசம்பாவனை -விபரீதபாவனை இம்மூன்றும் சம்சயத்திரையம், ஞாதுரு-ஞானம்-ஞேயம்-இம்மூன்றும் திரிபுடத்திரையம சுவர்க்கம்-மத்திய-பாதலம் இம்மூன்றும் உலோகத்திரையம், அஞ்ஞானம்-மாயை-வாசனைசித்து-இம்மூன்றும் மாரணத்திரையம், தாரிஷ்ணம்-தனஇஷ்ணம்- புத்திரஇஷ்ணம்- இம்மூன்றும் ஈஷணத்திரையம், மனோவிர்த்தி- அறிவுவிர்த்தி-ஆநந்தவிர்த்தி இம்மூன்றும் விர்த்தித்திரையம் அஞ்ஞானம்-ஆபரணம்-விக்ஷேபம் இம்மூன்றும் -பந்தத்திரையம், தேசம்-காலம்-வஸ்து இம்மூன்றும் திரிவித்திரையம்.

ஞாதா-கர்ம-கிரியை -இம்மூன்றும

புத்தம்-போச்வ்யம-போகம் ஆ ௧

பசு-பதி-பாசம் ௧

ஜகய-சீவம்-பரம் ௧

மண்ணாசை-பெண்ணாசை-பொன்னாசை ௧

இடம-பொருள்-ஏவல ௧

உடல-பொருள்-ஆவி ௧

வண்டு-பிள்ளை-பதார்த்தம் ௧

விராடடு-வைசிபவானந்த-வைராச்சர் ௧

இரணியகர்ப்பா-சூஸ்திராதர்-பிராணாதர் ௧

அவ்வியாகிருதர் அந்திரியாமி-ஈஸ்வரன் ௧

பிரமன்-விஷ்ணு-உருத்திரன ௧

சுருதி-குரு-சுவானுபவம ௧

தொம்பதம-தற்பதம-அசிபதம் ௧

விட்டபாவை தொட்டபாவை - விட்டுவிடாசபார்

வை-௧

வாச்சியம-லட்சியம்-லட்சியார்த்தம் ௧

சிவன்-ஈஸ்வரன்-பிரமம் ௧

சிவபதம-பந்தம-ஈஸ்வரபதம் ௧

மோட்சம பிரமபதம்-தானாயிருப்பது ௧

இச்சாமம சந்தூராயணம்-நித்தியம்-நைமித்தியம இவை

யே நிதயகர்ம சதுஷ்டயம ஆ ௪

தபோ-மந்திர-யோக-காமம் இவையே தபோகர்மசதுட்டயம்

தர்ம-அர்த்த-காம-மோட்சம்-இவையே சதுர்விதபலபுருஷார்த்தம்

சாதுர்க்கம் ஞானயோகம்-அபரோக்ஷசாம் ஆட்ச பரோக்ஷம்-அகங்காம் காமனாயோகம் நிஷ்க்ரிய சாவகாட் சியோகம் இவையே யோகசதுஷ்டயம்

ருக்கு-எசுர்-சாமம்-அதர்வணம்-இவையே வேதசதுஷ்டயம்

பிரக்கியானம்சத-பிரமம்-அகம்பிரமாஸ்மி -- தத்வமசி-அயமாத்மாபிரமம் இவையே மகாவாக்கியசதுஷ்டயம்

ஆத்மசிஷியரூஷை-அங்கசிஷியரூஷை- தானசிஷியரூஷை-யாவசிஷியரூஷை-இவையே சிஷியரூஷை சதுஷ்டயம்

மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம் இவையே அந்தக்கரணசதுஷ்டயம்

பிரமசாரி-கிரகஸ்தன்-வானப்பிரஸ்தன் சந்நியாசி இவையே ஆச்சிரமசதுஷ்டயம்

குரங்குபாவம்-மெள்ளாடபாவம்- படபாவம் எரு மைசகடாபாவம்-இவையே பாவசதுஷ்டயம் ௪௧

லயயோகம்-மந்திரயோகம்-அடயோகம் - ராஜயோகம்-இவையே யோகசதுஷ்டயம ௪௨

யந்த்ரம்-மந்த்ரம்-ஸ்வரம்-ஸ்வாதரம் இவையே- பச்சுவசதுஷ்டயம ௪௩

அண்டசம்-உற்பீசம்-சுவேதசம்-சராயுசம் இவையே உற்பவசதுஷ்டயம ௪௪

உலோகமார்க்கம்-நாசமார்க்கம் - புத்திரமார்க்கம் - சன்மார்க்கம் இவையே மார்க்கசதுஷ்டயம் ௪௫

சாதுசங்கம்-விசாரணை சாந்தி ·சந்தோஷம்- இவையே-சாதனைசதுஷ்டயம் ௪௬

சிவன்-ஈஸ்வரன்-கூடஸ்தம-பிரமம் இவையே சித்து சதுஷ்டயம் ௪௭

பிரமவேதம் பிரமவித்வான-பிரமவரியம்-பிரமவரிஷ்டன் இவையே சீவன்முக்தி சதுஷ்டயம ௪௮

சரியை-கிரியை-யோகம்-ஞானம்-சாலோகம்- சாமீபம் சாரூபம்-சாயுச்யம்-இவையே பதவிகளாம் ௪௯

அஸ்தி-பாதி-பிரியம்-நாமம் ரூபம்- இவையே அம்சபஞ்சகம் ௫௰

கர்மி-முமுட்சு-அப்பியாசி-அனுபவம் — ஆரூடம் இவையே அதிகாரபஞ்சகம ௫

அன்னமயம்-பிராணமயம்-மனோமயம்-விஞ்ஞானமயம்—ஆநந்தமயம் இவையே பஞ்சகோசங்கள் ௫

பிரிதிவு-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் — இவையே பூதபஞ்சகம் ௫

பிராணன்-அபானன்-உதானன்-வியானன்-சமானன் இவையே பிராணவாயுபஞ்சகம் ௫

சுரோத்திரம்-தொக்கு சட்சு-சிங்குவை- ஆக்கிராணம் இவையே ஞானேந்திரியபஞ்சகம ௫

சத்தம்-பரிசம-ரூபம்-ரசம்-கந்தம்- இவையே சப்தாதிவிஷயபஞ்சகம ௫

வாக்கு-பாதம-பாணி-குய்யம்-பாயுரு- இவையே கன்மேந்திரியபஞ்சகம் ௫

வசனம-கமனம்-தானம- ஆநந்தம் — விசர்ச்சனம- இவையே கன்மேந்திரியவிஷயபஞ்சகம் ௫

நாகன்-கூர்மன்-கிருகரன் தேவதத்தன்-தனஞ்சயன் இவையே உபவாயுபஞ்சகம ௫

கோபாக்கினி-சாமாக்கினி பந்தாக்கினி-சடாக்கினி-வடவாக்கினி-இவையே அக்கினிபஞ்சகம் ௫

சாரித்திரன்-ரூடிபலம்-சாம்பகதன்-முமூட்சு இவையே தாரதன்மியபஞ்சகம ௫

பராசக்தி—ஆதிசக்தி ஞானசக்தி—இச்சாசக்தி —கி
ரியாசக்தி இவையே பஞ்சசக்திகளாம் ௫

பிரமா—விஷ்ணு—உருத்திரன்—மயேஸ்வரன்—சதாசி
வன் இவையே பஞ்சகர்த்தாக்கள் ௫

சிருஷ்டி—திதி—சங்காரம்—திரோபவம்— அநுக்கிரக
ம் இவையே பஞ்சகிருத்தியங்களாம் ௫

பசி—தாகம்—பிறப்பு—சுகம்—இறப்பு—துக்கம் ஆ… ௬

சிசுத்வம்—காலிகாபுத்தம்—பக்குவம்—பாலியம—எவ்
வனம—வார்த்திகம்—இவையே ஷட்பாவவிகாரம் ௬

மூளை—அஸ்தி—நரம்பு—மாமிசம்—தோல் — உரோமம்
இவையே ஷட்கோசங்கள் ௬

காம—குரோத—லோப— மோக—மத—மாற்சரியம— இ
வையே அரிஷ்ட்டவர்க்கம்

மூலாதாரம்—சுவாதிட்டானம்—மணிபூரகம்— அநா
கதம்—விசுத்தி—ஆக்கினை—இவையே ஆராதாரம் ௬

உபக்கிரமம்—உபசம்மாரம்—இவையும் ஷெ முதல்
இலிங்கம் அப்பியாசம் இரண்டாவது அபூர்வதம் மூ

ணாறுவது பலம நானகாவது அர்த்தவாதம் ஐந்தாவது உபபத்தி ஆறுவது இவையே ஷட்விதலிங்கம் ௬

பாக்கிய திருசியான விததசவ்விகறப சமாதி-பாக்கிய சப்தானுவித்த சவ்விகறபசமாதி- அந்தர திருசியானுவித்த சவ்விகறபசமாதி- பாககியநிர்விகறபசமாதி-அந்தரங்கநிர்விகறபசமாதி இவையாறும விடசமாதி

இச்சை-திவேஷம்-சுகம்-துக்கம-சங்காதம்-சேதனம் துர்தி இவையே சப்தவிசனம ஆ. ௭

இஞ்ஞானம்-ஆவரணம்-விக்ஷேபம் - பரோக்ஷம்-அபரோக்ஷம்-துக்கநிவர்த்தி - ஆனந்தவியாபதி இவையே சப்தாவஸ்தைகள். ௭

சுபேச்சை-விசாரணை-தனுமானசை- சத்வாபத்தி அசம்சக்தி-பதார்த்தபாவனை-துரியம- இவையே ஞானபூமிகள ௭

குலம்-சலம்-தனம்-யெவ்வனம்-ரூபம்-வித்தை- ராசசியம்-தீபசு இவையே அஷ்டமதஙகள் ௮

தயை-சங்கை-பயம்-லச்சை-சிகிச்சை-குலம்- சீலம்-விரதம் இவையே அஷ்டமதங்கள் ௮

இயமம்-நியமம்-ஆசனம்-பிராணயாமம்-பிரத்தியாகாரம்-தியானம்-தாரணை-சமாதி இவையே அஷ்டாங்கயோகம் ௮

சாதனசதுஷ்டயச்சம்பத்தியுடைய அதிகாரிக்கு
மூன்றினது பக்குவம பிறந்தாலது பதிப்புண்ணியம் பின
னே மலபரிபாகம மேல பதிபுண்ணியம் மேல மலப
ரிபாகம் மேல சத்திநிபாதசமயம் மேல் இருவினை யொ
ப்பு இப்படிக்கொத்த அங்கதாடனே கூடி விளங்கப்ப
ட்ட முமூட்சுவாகிய சிஷனுக்குச சற்குருசுவாமிகள
உபதேசமனுக்கிரகஞ் செய்கிறு

தேகத்தை ஆத்மாவோ சொல்லுவென்றால் தே
கம் சடமாகையால ஆத்மாவாகமாட்டாது. பிராணுதி
வாயுக்களை ஆதமாவோசொலலுமென்றால் அவையும்
சடமாகையால ஆத்மாவாகமாட்டாது. இந்திரியங்களை
ஆத்மாவாகச் சொல்லுவோமென்றால் அந்தக்காணத
தை விஷவசாமர்த்திய மில்லாதபடியினுலே அதுவும்ச
டமே அந்தக்கரணத்தை ஆத்மாவாகச் சொலலுவோ
மென்றால் அந்தக்கரணங்களுக்கு ஆதாரமாகிய சீவனை
விஷவசாமர்த்தியமில்லாதபடியினலே அதுவும் சட
மே சிவனை ஆதமாவென்று சொல்லுவோமென்றால் ச
ர்வாதாரமாய் சாவகாரணமாய் சர்வபரிபூரணமாய் சர்வ
சாட்சி அதீதவிளக்கமாகிய அகண்டானந்த நிர்விகற்ப
சுத்தசைதன்னிய ஸ்வரூப சாக்ஷாத்கார நீங்கலாக சி
விக்கமாட்டாதாகையால் அதுவும் சடமே ஆதமாவப்

படிக்கொத்ததென்றால் சொரூபதார்த்தத்தை நினைத்
து அதைவிட்டு நீங்கி மற்றொருபதார்த்தத்தை நினை
யாமல நடுவில் யாதொரு விகற்பங்களுமில்லாமல் நிர்க்
குணப்திமாத்திரம் யாதொன்றுண்டோ அதுவே ஆத்
மக்கியானம் தன்னுடைய சங்கற்பவிகற்பத்தினாலே ஜ
கத்ரூபமாய்விளங்கும் ஜகதென்றுவிளங்குதற்கு ஞா
னமில்லாமல் வேறொன்றில்லை அதைவிலக்கிச் சொர்க்
காதிபோகங்களைக்கோருகிற பலப்பிராப்தி ஞானிகளு
க்கில்லை பரப்பிரமமென்று ஒருவஸ்துஇருக்கின்றது அ
து எப்படிக்கொத்ததெனறால் எண்ணிறந்த ஆனந்த
மாய் ஒருகாலத்திலும அழிவிலலாததாய் நித்தியமாய
ஞானஸ்வரூபமாய் ஆகாசத்தைப்போல் நிறைந்து நிபி
டாகாரமாய் ஏகமாய் சுகவைஸ்வாக்கியானமாய்உடைய ஆ
த்ம ஸ்வரூபந்தவிர மற்றொன்றென்கிற பேதமில்லாத
தாற்-பால்-தயிர்போல் பின்னொருவிகாரத்தையுமடை
யாததாய சகலசாமர்த்தியங்களுமுண்டாய் தன்மயமா
கிய சைதன்னியமென்னும் ஒருவஸ்துஉண்டு அந்தவ
ஸ்துதவிர பின்பு இப்போது இனிமேல் காலத்திரைய
த்திலும அன்னியமாய் இரண்டாம்வஸ்து இல்லவேயி
ல்லை ரூபமில்லாமல் ஞானமாத்திரமாகிய ஆத்மா தன்

னைத்தானே சிந்திக்கும் அப்போது சாரூபங்களாய் விளங்கும் இதற்குச் சுவப்பனம் பிரமாணம்

பிரமம் எப்படி நினைக்குமோ அந்தப்படி பதார்த்தங்கள் விளங்கும் அப்படி விளங்குகின்ற ரூபங்களெல்லாம் ஞானமாத்திரமாகிய தானே அந்தப் பதார்த்தங்கள் சகலமும் தானே முடையதாகியவராகையால் தனைத்தானே நினைத்து ரூபமாகவிளங்குகிறவஸ்து தானே இது பராபரமென்று பார்த்தால் அதற்குப்போசக் அனேகமாயிருக்குமென்றும் -மாயையென்றும்- அஞ்ஞானமென்றும்-சடமென்றும் இவ்விதமாய்ச்சொல்லப்படும் இதற்குப்பேதம் பரமார்த்தமாவுகளிலே பிரமா விஷ்ணு மகேஸ்வரராலே சம்பிரசப்பட்ட சிவராசிகளா தங்களை வேறொன்றாய் நினைத்துக்கொண்டால் பந்தம் இதுசம்பியவஸ்துவென்று நிர்ணயஞ்செய்கிற நிச்சயத்திலே வாசனையுண்டாகும் அந்த வாசனையினோடு கூடிய புண்ணிய கன்மங்களைச்செய்தால் சாமத்குணம் இரண்டும் சமமாய்ச்செய்தால் ராஜசகுணம் சாத்விககுணம் கன்மத்துக்குப் பலம் சொர்க்காதிபோகங்களாகிய சுகம் தாமசகுணம் காமத்துக்குப்பலம் நரகவேதனையாகிய துக்கம் ராஜசகுணம் கர்மத்துக்குப்பலம் மிசிரமான சுகதுக்கங்களை யனுபவிக்கிற மனிதஜனனம் ஞானம் சத்திய சங்கற்பமுடையதாகையால் காலை..

படி நினைத்தபடியாகவிளங்கும் ஆத்மஸ்வரூபத் திலே உண்டான ஸ்ரீமூர்த்திகளாலே கற்பிக்கப்பட் ட சீவர்கள் தமது ஸ்வரூபம் சின்மாத்திரமென்றறியாமல் தச சாக்ஷி அவயவங்களானதேசம் தானென்றெண்ணிக் கொண்டால் ஜென்மங்களையெடுத்து மரணங்களை ய டைந்து சுகதுக்கங்களை யனுபவிப்பார்கள் ஸ்வரூபம் தானென்று நிச்சயித்துக்கொண்டால் மோட்சத்தை ய டைவார்கள்

முமுட்சுக்கு மூன்றுசனனம் அற்பியாசிக்கு இர ண்டுசனனம் அனுபவசாலிக்கு ஒருசனனம் ஆரூட னுக்குச் சனனமேயில்லை.

பிரிதிவிக்குக் காரணம் கடினம் மண்ரூபமேகாரி யம் நவதானங்கள் நவலோகங்கள் சிலைகள் பருவதங்க ள் காரியப்படுகைவெளியிலே பஞ்சபூதங்களுக்குக் கா ரணம் காரியம் காரியப்படுகை.

எழுபபுதை எண்பத்துநான்குலட்சம் ஜீவராசிக ளுக்கும் தேகங்களாய் விடுவாசல் மசசுமா[illegible] புறிவதேகாரியப்பட்டுவிடுகை. [illegible]

அப்புவுக்குச் சீதளம்-காரணம்-மழை பெய்கிறதே சமுத்திரம்-நதிகள்-ஏரி-குளம்-குட்டை-நிரம்புவதே காரியப்படுக குடிக்கிறது நக்கிறது உறிஞ்சுகிறது இறைக்கிறது தேன்பால் தயிர் தேங்காய்ப்பால் கள் முதலான சர்வச் சாரம் ஏத்தமிறைக்கிறது சலகுஸ்திரமுதலானதும் காரியப்பட்டு விடுக.

அக்கினி-உஷ்ணம்-காரணம் -சர்வதேகத்திலும்-சமஸ்தத்திலேயும் இமிடியிருக்கிறதே காரியம வடவாக்கினி-பிரளயாக்கினி-காலாக்கினி-மூலாக்கினி-கோபாக்கினி-மந்தாக்கினி-காமாக்கினி-சோமாக்கினி முதலானதுகள் காரியப்படுத்துக.

அடுப்பு-நெருப்பு-சுடுகாட்டு-நெருப்பு- மடப்பள்ளி-நெருப்பு-சக்கிமுக்கி-நெருப்பு-நிலை-புருசு - ஆகாசபாணம-பகல்வத்தி முதலானதுகள் காரியப்பட்டுவிடுக.

ஆகாசத்துக்கு அவகாசம் நிரந்தரம் காரணம் திசைஃபிங்குகள் காரியம் சாவத்துக்கும் இடமாவதே கடாகாசம் மடாகாசம் தேகாகாசம் வனகாசம் கோபுராகாசம் என்கிற உபாதிகாசமே

## பஞ்சீகரண

அத்தியாத்மம்-அதிபூதம்-அதிதெய்வங்களை

விசாரிப்போமாக.

(சுரோத்திர அத்தியாத்மம்) சப்தம் அதிபூதம் திக்குகள் அதிதெய்வம் (த்வக்கு அத்தியாத்மம்) பரிசம் அதிபூதம் வாயு அதிதெய்வம் (சட்சு அத்தியாத்மம்) ரூபம் அதிபூதம் சூரியன் அதிதெய்வம் (சிங்குவை அத்தியாத்மம்) ரசம் அதிபூதம் வருணன் அதிதெய்வம் (கிராணம் அத்தியாத்மம்) கந்தம் அதிபூதம் அசுவினி தேவதைகள் அதிதெய்வம்

(வாக்கு அத்தியாத்மம்) பேசுகிறது அதிபூதம் அக்கினி அதிதெய்வம் (பாத அத்தியாத்மம்) கமனம் அதிபூதம் உபேந்திரன் அதிதெய்வம் (அஸ்தம் அத்தியாத்மம்) தானம் அதிபூதம் இந்திரன் அதிதெய்வம் (குய்யம் அத்தியாத்மம்) ஆனந்தம் அதிபூதம் பிரசாபதி அதிதெய்வம் (பாயுரு அத்தியாத்மம்) விசர்க்கம் அதிபூதம் மிருத்து அதிதெய்வம் (மனசு அத்தியாத்மம்) சங்கற்பம் அதிபூதம் சந்திரன் அதிதெய்வம் (புத்தி அத்தியாத்மம்) நிச்சயம் அதிபூதம் சதுர்முகன் அதிதெய்வம் (சித்த அத்தியாத்மம்) ஆலோசனை அதிபூதம்

தேகேந்திராதிகள் ஆதியந்தசகிதம் ஆத்மா ஆதியந்தரகிதம் தேகேந்திராதிகள் சாதநியவிகாரி சுகதுக்கசகிதம் ஆத்மாசாத்திய விகாரரகித சுகதுக்கபேதரகிதம் தேகேந்திராதிகள் காரியம் ஆத்மாகாரணம் தேகேந்திராதிகள் திரிகுணசகிதம் ஆத்மாநிர்க்குணம் இந்தப்பிரகாரம் தேகேந்திரியப்பிரபஞ்சத்துக்கும் பிரமத்துக்கும் விலக்ஷணம் நன்றாய்விசாரித்து அந்நியோன்ய ஆத்மாவேயாவனென்று யாரறிகிறார்களோ அவர்களே ஜீவன்முக்தர்களென்று வேதாந்தசித்தாந்தம்

## சப்தவிதசைதன்னியம்.

சுத்தசைதன்னியமென்றும் ஈஸ்வரசைதன்னியமென்றும் ஜீவசைதன்னியமென்றும் பிரமாத்துருசைதன்னியமென்றும் பிரமாணசைதன்னியமென்றும் பிரமேயசைதன்னியமென்றும் பலசைதன்னியமென்று இப்படிக்கு விவகாரத்தில் ஒருசைதன்னியமே ஏழுவிதமாய்ச் சொல்லப்படும் இவ்வேழுவிதத்துக்குந் தேகங்களை நிரூபிக்கிறோம்.

மாயையொடுகூடாத சைதன்னியம் சுத்தசைதன்னியமென்றுபெயர் அம்மாயையோடுகூடின சைதன்னியம் ஈஸ்வரசைதன்னியமாகும் அவித்தையோடு கூடினசைதன்னியம் ஜீவசைதன்னியமாம் அந்தக்கரண

ஞானமாவது துவைதமாகிய ஆத்மாவை அத்வைதமாக வறிகிறதேயாகும் அபரிச்சின்னமாகிய ஆத்மாவை பரிச்சின்னமாக வறிகிறதேயாகும் அசங்கத்துவமாகிய ஆத்மாவை அசங்கத்துவமாக வறிகிறதேயாம் அகர்த்தாவாகிய ஆத்மாவை அகர்த்தாவாக வறிகிறதேயாம் அபோகதாவாகிய ஆத்மாவை அபோகதாவாக அறிகிறதேயாம் இந்தப்பிரகாரம் விசாரித்து சரீரத்தினைய விட்சணராய் பஞ்சகோச வேதாருத்தராய் அவைத்தாதினைய சாட்சியாகிய அதனவதா ஆனந்தபரிபூரண ஆத்மாவே தானென்றறிகிறதேயாம்.

## தேகேந்திரியாதிகளுக்கும் ஆத்மாவுக்கும் இலட்சணத்துவம்

தேகேந்திராதிகள் அனித்தியம் ஆத்மா நித்தியம்-தேகேந்திராதிகள் அசுத்த ஆத்மா, சுத்தஸ்வரூபம்-தேகேந்திராதிகள் ஜடரூபம் ஆத்மாபோதஸ்வரூபம்-தேகேந்திராதிகள் துக்கரூபம் ஆத்மாசுகசொரூபம்-தேகேந்திராதிகள் திரஷ்டா ஆத்மா அத்ரஷ்டா-தேகேந்திராதிகள் விகாரம்-ஆத்மா, நிர்விகாரம், தேகேந்திராதிகள் பரிச்சின்னம் ஆத்மா அபரிச்சின்னம்-தேகேந்திராதிகள் சுவபேக்ஷாபிரகாசம் ஆத்மா நிரபேக்ஷாபிரகாசம் - தேகேந்திராதிகள் ஆதேயம் ஆத்மா ஆதாரம்-தேகேந்திராதிகள் சர்வைவம் ஆத்மா நிர்வைவம்-தேகேந்திராதிகள் பிரகாசம் ஆத்மா சுயம்பிரகாசம்

ளலே ஞானிகளுடைய வியாபாரமும் நானாவிதமாயி
ருக்கும்.

விவேகியானவர்கள் தங்களுடைய வியாபாரங்
களைப்பார்த்து சாஸ்திரப்படி சொல்லுகிறது இ
வர்களுடைய வியாபாரப்படியிருக்கிறதென்று பிர
மிக்கவேண்டியதில்லை அவரவர்கள் கர்மவசத்தினாலே
நானாவித வியாபாரத்தோடே கூடியிருந்தாலும் ஞானமு
ம் ஞானத்தாலாகும் பலமானமுமாகியமும் சமானமென்
று வேதாந்தசாஸ்திர சித்தாந்தம்

## ஞானம் அஞ்ஞானத்தினுடைய விவரம்.

அஞ்ஞானமாவது தன்னையதார்த்தமா யறியாத
து ஞானமாவது தன்னையதார்த்தமாயறிந்தது மேலு
ம் அஞ்ஞானமாவது தன்னை சரீராதி அவயவாகார
மாகிய தேகமாக வறிகிறதேயாகும் ஞானமாவது தன்
னைப் பிரமஸ்வரூபமாக வறிந்ததேயாம்.

அஞ்ஞானமாவது அத்வைதமாகிய ஆத்மாவை
த்வைதமாக வறிந்ததேயாகும் அபரிச்சின்னமாகிய ஆ
த்மாவைபரிச்சின்னமாக வறிகிறதேயாகும் அசங்க
மாகிய ஆத்மாவைச் சங்கமாக வறிகிறதேயாகும் அகர்
த்தாவாகிய ஆத்மாவைக் கர்த்தாவாக வறிகிறதேயாகு
ம் அபோக்தாவாகிய ஆத்மாவை போக்தாவாக வறிகிற
தே அஞ்ஞானம்.

மோட்சத்தை யடைவதற்கு இந்த மூன்றும் பிர தானமாய் வேண்டியதோவெனில் சாதனங்களை அபேட்சிக்காமலே பிரத்தியட்சமாய் மோட்சத்தை அடைகிறபடியினால் ஞானமொன்றே பிரதானம்.

வைராக்கிய உபாதி யிரண்டும் பூரணமா யிருந்தாலும் ஞானமில்லாவிட்டால் மோட்சமில்லை.

இவ்விரண்டும் ஞானத்துக்குச் சாதனமாயிருக்கும் இந்த மூன்றும் ஒரு புருஷனிடத்திலிருக்குமேயாகில் மாதபோக பலம ஒவ்வொருபுருஷனிடத்தில் கர்ம வசத்தினாலே ஒவ்வொன்றுமில்லாதிருக்கும எந்தப்புருஷனுக்கு வைராக்கியமும் உபாதியும பூர்ணமாயிருந்தும் ஞானம ஒன்றுமாத்திரம இல்லாவிடில் அவனுக்கு மோட்சமில்லை எந்தப்புருஷனுக்கு வைராக்கிய உபாதியில்லாமல் ஞானமாத்திரம் பூரணமாயிருந்தால் அவனுக்கு மோட்சமே சித்தம்

ஆனால் வைராக்கிய உபாதிவியர்த்தமாய்ப் போகுமோவென்றால் போகாது இவ்விரண்டும் தமசானபடியால் புண்ணியலோகப் பிராப்தி சிக்கும் இதனாலே ஞானத்துக்குப் பிரயோசனமென்னவென்றால் இந்த வைராக்கிய உபாதிரண்டுமில்லாவிட்டால் பிரத்தியஷ சத்துக்குப்போகாது பிரார்த்வ கர்ம நானாவிதமானபடி

இயமநியமாதி அஷ்டாங்கயோகம் ஏதுசித்த நிரோதம் ஸ்வரூபம் சாவிகார நாசமேகாரியம சாக்கிரதநிலே காடாமதகார சுழுத்தியைப்போல் தேகாதிபிரபஞ்சத தை மறந்திருப்பதே அப்பியாசம்

ஞானத்துக்கு சிரவண மனன நிதித்தியாசனம ஏது இந்தசிரவணத்திலே தேகாந்திராதி பிரபஞ்சத்தை யும ஆத்மஸ்வரூபத்தையும் பகுத்து அந்த அத்வைத பிரத்யேகாத்தும ஸ்வரூபமே தானென்று இந்தத் தே கேந்திரியாதி பிரபஞ்சந்தானல்ல

இந்தப் பிரபஞ்சந் தோன்றப்பட்டபோதும் கால த்திரயத்திலும் இல்லையென்று புத்தியில் திருஷ்டி நி ச்சயம் வருகிறதே ஞானத்துக்கு ஸ்வரூபம் மறுபடியு ம் இந்த ஆத்மஸ்வரூபமான தேகாந்திரியாதிகள் தா னென்றுவராம லிருப்பதேகாரியம்.

அஞ்ஞானகாலத்தில் தேகேந்திராதி னென்று ...ர்த்தமாம நிச்ச... த புத்தி யெவ்வள... பமோ...

# வேதாந்த சித்தாந்தம்

க்ஷேத்திரிக்கன் உதிசெய்வ
அபிமானம அதிட்டதம இர நி
அதநியாதம ) விசாரப அதி
வாம இதுகளைகளாங்கூடி ச
ந்தி அவஸ்தைகளாயின இவை
யங்களென்றும் பெயர் நித
(சுச் சாட்சியாய் நித்தியராய்
ஸ்வரூபரான ஆதமாதானென்
அவாகளே சிவனமுக்தாகளென்
று சொல்லுகின்றது

## வைராககயவுபாது(

வைராக்கிய உபாதிபோதத்
சாரியம அவைதிபலம நிரூபிக்கிறே,

இவைராக்கியததுக்குச் ச
ம எது அந்தவிஷய
ங்களே ப